தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: 8 திகதி: 21.06.2025

நேரம்: 2 1/2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	10	
வினா 2	20	
வினா 3	20	
வினா 4	10	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	3

கேட்டுக் கிரகித்தல்

உரைப்பகுதியைக் கேட்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நட்பின் வகைகள் எவை?

2. நல்ல நண்பன் எப்படி இருப்பான்?

3. நட்பை எந்த மரங்களுடன் ஒப்பிடுகிறார்கள்?

4. இரண்டாம் வகை நண்பர் எப்படி இருப்பார்கள்?

5. மூன்றாம் வகை நட்பு உள்ளவர்கள் எப்படி இருப்பார்?

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	4

பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கண்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறீர்களா?

<u>சில அறிவுரைகள்</u>

- நமது கண்களில் தூசி விழுந்ததும் கண்களை கசக்காதீர்கள்.
- எந்தகாரணம் கொண்டும் கண்களைக் கசக்காதீர்கள். கண்பார்வை பறிபோக நீங்களே காரணம் ஆகி விடுவீர்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் ஒரு பொருளைக் கூர்ந்து அவதானிக்கும் போது கண்களில் கண்ணீர் வந்தால் அதனை நிறுத்தி விடுங்கள்.
- வெளிச்சம் குறைவாக இருக்கும்போது வாசிக்கும் பழக்கம் இருந்தால் பார்வைக் கோளாறு ஏற்படும்.
- வாகனங்களில் பயணம் செய்யும்போது வாசிக்கக் கூடாது. கண்கள் சிரமப்படும். வாசிப்பதனால் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு.
- புத்தகத்தை வாசிக்கும் போது கண்களுக்குக் குறைந்தது ஒரு அடி தூரத்தில் வைத்து வாசிப்பதே நல்லது.

கண்களை பாதுகாக்கும் நண்பர் அமைப்பு.

1. இத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர் யார் ?

.....

.....

2. இத்துண்டுப் பிரசுரம் எதைப்பற்றி விபரிக்கிறது?

.....

.....

3. கண்களில் தூசு விழுந்தால் என்ன செய்யக்கூடாது?

.....

.....

4. புத்தகத்தை வாசிக்கும்போது கண்களுக்கு குறைந்தளவு எவ்வளவு தூரத்தில் வைத்து வாசிக்க வேண்டும்?

5. எப்பொழுது பார்வைக் கோளாறு ஏற்படலாம் என்று கூறப்பட்டுள்ளது?

– மறுபக்கம் பார்க்கவும்–

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	6

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மக்களுக்கு மிகவும் பயன்படும் மரங்களில் யூகலிப்டஸ் மரமும் ஒன்று. இம்மரம் அவுஸ்திரேலியாக் கண்டத்தில் தான் தொடக்கத்தில் காணப்பட்டது. ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தான் இந்த மரத்தைப் பற்றி மற்ற நாட்டினரும் அறிந்திருந்தனர். இன்று இது உலகின் பல்வேறு நாடுகளிலும் பயிரிடப்படும் பயனுள்ள மரமாகத் திகழ்கிறது. இதைக் கோந்து மரம் என்றும் அழைப்பார்கள்.

யூகலிப்டஸ் மரத்தில் நூற்றுக்கணக்கான வகைகள் உண்டு. சில வகை யூகலிப்டஸ் மரங்கள் அடர்ந்து தளைத்துப் படரும். வேறு சில மரங்கள் நேராகவும் உயரமாகவும் வளரும். இக்கன்றுகளை நட்டால் ஓராண்டில் சுமார் 4 மீட்டர் உயரம் வளர்ந்து விடும். இம்மரம் செழித்து வளர்வதற்கு மிகுதியான தண்ணீர் வேண்டும். ஆகையால் இதைப் பெரும்பாலும் சதுப்பு நிலங்களில் பயிரிடுவார்கள். கொசுக்கள் உற்பத்தியாகும் சதுப்பு நிலங்களில் உள்ள நீரை இது எடுத்துக் கொண்டு விடுவதால் மலேரியாவை ஒழிப்பதற்கு இம்மரங்கள் பெருமளவுக்குத் துணை புரிகின்றன.

இம்மரத்தின் இலைகளில் இருந்து இளம் மஞ்சள் வண்ணத்தில் ஒருவகை எண்ணெய் கிடைக்கிறது. இதுவே நீலகிரித் தைலம் எனப்படும் தலைவலித் தைலம் ஆகும்.

இந்தியாவில் ஆங்கிலேயர் முதன் முதலில் நீலகிரி மலையில் இம்மரங்களை நட்டுப் பயிர் செய்தனர். இதன் இலைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கு நீலகிரித் தைலம் என்னும் பெயர் உண்டாயிற்று. மூக்கடைப்பு, தசைப்பிடிப்பு, உடல் நோவு போன்ற பல நோய்களுக்கு இந்த எண்ணெய் வியக்கத்தக்க பலனைத் தரும் மருந்தாகப் பயன்படுகிறது.

1. யூகலிப்டஸ் மரம் முதன் முதலில் எங்கு காணப்பட்டது?

.....

.....

2. இம்மரம் நன்றாக வளர்வதற்கு தேவையானது எது?

.....

.....

3. மலேரியாவை ஒழிக்க இம்மரங்கள் எவ்வாறு உதவுகின்றன?

4. நீலகிரித் தைலம் என்னும் பெயர் உண்டாகக் காரணம் என்ன?

5. நீலகிரி தைலத்தை மக்கள் ஏன் பயன்படுத்துகிறார்கள்?

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	7

பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்கு குறையாமல் வாக்கியம் அமைக்கவும்

1. குடும்பம்

2. கலை விழா

3. சனிக்கிழமை

4. பாடசாலை விடுமுறை

5. மகாபாரதம்

6. பண்டிகை

7. நூல் நிலையம்

8. ஓய்வு நேரம்

9. அதிபர்

10. பெற்றோர்

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	8

உடலை நலமாக வைத்திருக்கும் பல வழிகளில், உடற்பயிற்சி முக்கியமான பங்கு வகிக்கிறது.

நீர் விரும்பி விளையாடும் ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து,

- அந்த விளையாட்டு உமது உடலுக்கு எவ்வாறு புத்துணர்ச்சியை வழங்குகிறது.
- அந்த விளையாட்டின் போது நீர் பெற்ற அனுபவம் என்ன?
- அந்த அனுபவம் ஏன் உமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது?

இவற்றைப் பற்றிய உமது எண்ணங்களை குறைந்தபட்சம் 80 சொற்கள் கொண்ட கட்டுரையாக எழுதுக. எழுத்தாக்கத்திற்குக் கீழ்வரும் குறிப்புகளைப் பயன்படுத்துக. குறிப்பு:

- "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி

- இன்றைய மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தும் சூழலில், உடற்பயிற்சியின் முக்கியத்துவம்.
- சிலர் பெற்றோரின் உந்துதலினால், வாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாட்களில் பயிற்சி பெறுகின்றனர்.
- சிலர் கால்ப்பந்து, வலைப்பந்து, நடனம், தற்காப்புக் கலை போன்றவற்றில் வாரத்தில் ஒரு நாள் பயிற்சி பெறுகின்றனர்.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

120 சொற்களுக்கு குறையாமல் பின்வரும் தலைப்புகளில் ஒன்றில் ஏதாவது ஒரு ஆக்கம் எழுதுக.

1. நீர் அண்மையில் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சென்று வந்த சுற்றுலா ஒன்றை நினைவுபடுத்துக. சுற்றுலாவுக்குச் சென்ற நாளிலிருந்து மீண்டும் திரும்பி வந்தது வரைக்கும் நடைபெற்ற விடயங்களை வரிசைப்படுத்தி எழுதுக. அல்லது,

2. நான் பார்த்து மகிழ்ந்த கலாச்சார நிகழ்வு ஒன்றைப் பற்றிய உமது அனுபவம்.

   அல்லது,

3. பின்வரும் கதையை வாசித்து 120 சொற்களுக்கு குறையாமல் மேலதிகமாக எழுதி முடிக்கவும்

சிட்னி முத்தமிழ் மன்றத்தின் சிலப்பதிகார விழா சிட்னி துர்க்கை அம்மன் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. அப்பா அம்மாவுடன் நானும் அந்த நிகழ்ச்சிக்குச் சென்றேன். பாட்டு, நடனம், நாடகம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இடைவேளை விடப்பட்டது. சிற்றுண்டிகள் வாங்கி உண்பதற்கு அப்பா எனக்கு பத்து வெள்ளிகள் தந்தார். நான் அந்த வெள்ளிகளுக்கு சிற்றுண்டி உண்டு விட்டு ஐந்து வெள்ளிகளை எனது சட்டப்பையில் வைத்திருந்தேன். பிள்ளைகள் அதிர்ஷ்ட சீட்டுக்களை விற்பனை செய்ய வருவார்கள் என்றும், ஒன்றின் விலை ஐந்து வெள்ளிகள் என்றும் முதலாவது பரிசு சிங்கப்பூர் சென்று வருவதற்கான விமானப் பயண சீட்டுகள் என்றும் அறிவித்தார்கள். நானும் ஒரு சீட்டை வாங்கி வைத்திருந்தேன்.

நிகழ்ச்சிகள் முடிந்த பின்பு சீட்டுக்களைக் குலுக்கி வெற்றி பெற்ற சீட்டு இலக்கத்தை அறிவித்தார்கள். என் காதுகளை என்னால் நம்ப முடியவில்லை. எனது சீட்டு இலக்கத்தை முதற் பரிசு பெற்ற சீட்டு என்று அறிவித்தார்கள். அளவற்ற மகிழ்ச்சியுடன் மேடையை நோக்கி ஓடினேன். . . . . .